# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 308/ந/2025, நாள் 12.11.2025

R. சிரில்ஸ்டீபன்,
கீழப்புலியூர், தென்காசி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி,
தென்காசி மாவட்டம். – எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், கீழப்புலியூர், புலிக்குட்டி விநாயகர் கோவில் தெரு, கதவு எண்.10/21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர். சிரில்ஸ்டீபன் என்பவரது 31.07.2025 நாளிட்ட புகார் மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 04.08.2025 அன்று பெறப்பட்டு, 308/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், கீழப்புலியூர், புலிக்குட்டி விநாயகர் கோவில் தெரு, கதவு எண்.10/21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர். சிரில்ஸ்டீபன் என்பவரின் 31.07.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நகராட்சியில் பணிபுரியும் SSLC தேர்ச்சி மற்றும் ITI தேர்ச்சி பெற்ற தொழில் நுட்ப பணியாளர்களுக்கு அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986–ன்படி ஊதியம் மறுநிர்ணயம் செய்து வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் ந.க.எண்.1742/2021/எப்3, நாள் 28.05.2021–ன் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் அரசு கூடுதல் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறைக்கு கடிதம் அனுப்பியிருந்தார்கள். மேற்கண்ட கடிதத்திற்கு அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை, நாள் 20.08.1986–ன்படி மேல் நடவடிக்கை தொடர அரசு கடிதம் எண். 11447/நப.3/2021–4, நாள் 11.02.2022–ன் வழியாக அரசு கூடுதல் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்கள் அரசாணை எண். 338, நிதித் (ஊபி) துறை, நாள் 26.08.2016ல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக இயக்குனர் அளவிலேயே நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

மேற்கண்டவாறு அரசு கூடுதல் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் எண். 11447/நப.3/2021–4, நாள் 11.02.2022–ல் கண்டுள்ள கடிதத்தின்படி, நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் ஆய்வு செய்து கடிதம் ந.க.எண்.1742/2021/எப்3, நாள் 26.04.2022–ல் கண்டுள்ள கடிதம் வழியாக நகராட்சி/மாநகராட்சி ஆணையர்அவர்களுக்கு அரசு கடிதத்தின்படி நகராட்சி/ மாநகராட்சிகளில் பணியாற்றிவரும் SSLC தேர்ச்சி மற்றும் ITI தேர்ச்சி பெற்ற தொழில் நுட்ப பணியாளர்களுக்கு அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986–ன்படி ஊதியம் மறு நிர்ணயம் செய்து வழங்க தெளிவுரை கடிதம் அனுப்பியிருந்தார்கள். மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1742/2021/எப்3, நாள் 26.04.2022 ஐ இணைத்து உள்ளாட்சி நிதி தணிக்கை சிறப்பு இயக்குநர், நந்தனம், சென்னை அவர்களின் நடவடிக்கை கடிதம் எண். 015151/நத.3/2022, நாள் 26.07.2022–ல்

கண்டுள்ள கடிதம் வழியாக சிறப்பு இயக்குனர் அவர்களின் கீழ் பணிபுரியும் சிறப்பு பணி அலுவலர் மற்றும் மண்டல இணை இயக்குனர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் தெளிவுரை கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, SSLC தேர்ச்சி மற்றும் ITI தேர்ச்சி பெற்ற தொழில்நுட்ப பணியாளர்களுக்கு தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்வது தொடர்பாக தெளிவுரை வழங்கியதின்படி மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தை இணைத்து அனுப்பியிருந்தார்கள்.

மேற்கண்ட உள்ளாட்சி நிதி தணிக்கை சிறப்பு இயக்குநர், நந்தனம், சென்னை அவர்களின் நடவடிக்கை கடிதம் எண். 015151/நத.3/2022, நாள் 26.07.2022–ல் கண்டுள்ள கடிதம் வழியாக உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை சிறப்பு இயக்குனர் அவர்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் தெளிவுரை கடிதத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்ததின் அடிப்படையில் கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்கள் அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986 மற்றும் அரசு கடிதம் எண்.11447/நப3/2021–4, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.02.2022–ன் படி ஊதியம் மறு நிர்ணயம் செய்வதால் தணிக்கை தடை ஏற்படுமா என்று மண்டல தணிக்கை அலுவலர்களிடம் கேட்டு தணிக்கை தடை ஏற்படாது என்று தெரிவித்த பின்னர் எனக்கு அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986 மற்றும் சிறப்பு இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களின் நடவடிக்கை கடித எண்.015151/நத.3/2022, நாள் 26.07.2022–ன்படி ஊதியம் மறு நிர்ணயம் செய்து வழங்கிவிட்டார்கள். நான் பணியில் இருந்த போதும், மேலும் ஓய்வு பெறும் வரையிலும் எனக்கு வழங்கிய ஊதியத்திற்கு எந்தவித ஆட்சேபனைகளும் தணிக்கை துறையில் தெரிவிக்கப்படவில்லை.

தற்போது, நான் 01.10.2024 அன்று பிற்பகல் முதல் விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன். எனது ஓய்வூதிய கருத்துருக்களை கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களால் இயக்குனர், உள்ளாட்சி நிதி தணிக்கை, நந்தனம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களால் அனுப்பிய ஓய்வூதிய கருத்துருவின்படி ரூ.76,500/-விற்கு எனக்கு ஓய்வூதியம் வழங்காமல் சிறப்பு இயக்குனர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலக ஓய்வூதிய சரிபார்ப்பு பிரிவு உதவி இயக்குனர் மற்றும் ஆய்வாளர் அவர்கள், அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடிதம் ந.க.எண். 12277/ME3/2013–2, நாள் 28.01.2014ஐ மேற்கோள் காட்டி, ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் அனுப்பிய கடிதத்திற்கு நிதித்துறையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா அவ்வாறு நிதித்துறை ஒப்புதல் பெறப்பட்ட கடிதம் அனுப்பினால் மட்டுமே கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களின் கருத்துருபடி ஓய்வூதியம் வழங்கப்படும் என்று தெரிவித்து, ஓய்வூதியம் வழங்க மறுத்து 01.01.2016–ல் நான் பெற்ற ரூ.56,900/-ற்கு பதிலாக ரூ.53,600/- என்ற ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கியுள்ளார்கள். மேலும், என்னுடன் ஒரே மாதம் ஒரே ஆண்டில் பணியில் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் 01.01.2016ல் நிர்ணயம் செய்த ரூ.56,900 என்று ஊதியத்தில் கூடுதலாகவும் எனக்கு ரூ.53,600 என்ற ஊதியத்தில் குறைவாகவும் ஓய்வூதியம் நிர்ணயம் செய்து வழங்கியுள்ளார்கள். மேலும், எனக்கு மட்டும் எனக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடையை நிறுத்தி வைத்து பரிசீலித்து பின்னர் ஓய்வூதிய பணிக்கொடை வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். இது எனக்கு மேலும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கண்ட அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடிதம் ந.க.எண். 12277/ME3/2013–2, நாள் 28.01.2014–ல் கண்டுள்ள கடிதத்தில் அரசாரணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ரத்து செய்வதாக எந்த இடத்திலும் தெரிவிக்கப்படவில்லை. மேலும், மேற்கண்ட கடிதத்தில் அரசாரணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986–ன்படி நகராட்சி/மாநகராட்சி/மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரிகின்ற தொழில்நுட்ப பணியாளர்களுக்கு முன்தேதியிட்டு அடுத்தடுத்த ஊதிய திருத்தங்களின் அடிப்படையில் அடுத்தடுத்த ஊதியத்திற்கு இணையாக நடைமுறைக்கு வந்துவிட்டதால் அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986–ல் கண்டுள்ள அரசாணை போன்று புதியதாக அரசாணை முன்தேதியிட்டு வழங்குமாறு கேட்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குனரின் கோரிக்கையில் எந்த ஒரு நியாயமும் இல்லை **(NO JUSTIFICATION)** என்பதால் நகராட்சி நிர்வாக இயக்குனரின் முன்மொழிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தான் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை எண். (ப) 123, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நப.3) நாள் 25.02.2011–ன்படி, வெள்ளக்கோவில் மற்றும் வீரப்பன் சத்திரம் நகராட்சியில் பணிபுரியும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986–ல் கண்டுள்ள அரசாணையின்படி ஊதியம் வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986ல் கண்டுள்ள அரசாணையின்படி, ஊதியம் மறு நிர்ணயம் செய்ததற்கு நிதி (ஊதியக்குழு) துறையின் 11.02.2011 நாளிட்ட அலுவல் சாரா எண்.42597/ பிசி/2010-1ல் நிதித் துறையின் ஒப்புதல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அரசு சார்புச் செயலாளர், நிதித்துறை அவர்களின் கடிதம் எண். 70513/ஊ.பி./2012–1, நாள் 07.01.2013–ல் அரசாணை எண் 762, நிதித் (ஊபி) துறை, நாள் 20.08.1986ல் வெளியிடப்பட்ட பொதுவான ஆணையின்படியும், அரசாணை எண். 511, நிதித் (ஊபி) துறை, நாள் 01.08.1992ல் ஒரு நபர் குழு மற்றும் அலுவலர் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள பொதுவான ஆணைகள் என்றும், எனவே நகராட்சி/மாநகராட்சிகளில் பணிபுரியும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு ஊதிய திருத்தம் சம்பந்தப்பட்ட நிர்வாக துறைகளுக்கு தக்க கருத்துருக்களை அனுப்பி ஊதிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்தான் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1742/2021/எப்3, நாள் 28.05.2021–ன் வழியாக கருத்துரு அனுப்பி தற்போது அரசாணை எண் 762, நிதித் (ஊபி) துறை, நாள் 20.08.1986–ன்படி ஊதியம் திருத்தி வழங்கி உள்ளார்கள்.

மேலும், அரசாரணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986, நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.1742/2021/எப்3, நாள் 28.05.2021 மற்றும் அரசு கூடுதல் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் எண். 11447/நப.3/2021–4, நாள் 11.02.2022–ன்படி, ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு தெளிவுரை கோரி அனுப்பிய கடிதத்திற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநரின் தெளிவுரை கடிதம் எண். 38277/2024/மாநஅ–2, நாள் 20.01.2025–ன் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1742/2021/எப்3, நாள் 26.04.2022–ல் கண்டுள்ள கடிதத்தின்படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கலாம் என்று தெளிவுரை கடிதம் வழங்கி உள்ளார்கள். மேலும், எனது கடித நாள் 20.06.2013 ன் வழி அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு நான் கோவில்பட்டி நகராட்சியில் பணியில் இருந்தபோது SSLC தேர்ச்சி மற்றும் ITI தேர்ச்சி பெற்றிருந்ததால் எனக்கு அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986–ன்படி ஊதியம் மறுநிர்ணயம் செய்து வழங்க கோரி விண்ணப்பித்திருந்தேன். எனது விண்ணப்பத்தினை ஏற்றுக்கொண்டு அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (நப.3) துறை கடிதம் எண். 15747/நப3/2013–1, நாள் 11.07.2013 –ல் எனது விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்கள். நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் அவர்கள் அரசு கடிதத்தையும், எனது விண்ணப்பத்தையும் இணைத்து SSLC தேர்ச்சி மற்றும் ITI கல்வி தகுதி பெற்ற எனக்கு ஊதியம் மறு நிர்ணயம் கோரியதை தொடர்ந்து எனது விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க இணை இயக்குநர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் ஒ.மு.எண்.26678/2013/எப்3, நாள் 05.02.2014–ல் கண்டுள்ள கடிதம் வழியாக கோவில்பட்டி நகராட்சி அவர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

நான் கோவில்பட்டி நகராட்சியில் இருந்து சங்கரன்கோவில் நகராட்சிக்கும் பின்பு சங்கரன்கோவில் நகராட்சியிலிருந்து கடையநல்லூர் நகராட்சிக்கும் இடமாறுதல் பெற்று வந்த பின்பு மேற்கண்ட அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை நாள் 20.08.1986, அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (நப.3) துறை கடிதம் எண். 15747/நப3/2013–1, நாள் 11.07.2013 மற்றும் இணை இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் ஒ.மு.எண்.26678/2013/எப்3, நாள் 05.02.2014–ல் கண்டுள்ள அரசாணை மற்றும் கடிதத்தின்படி ஊதியம் மறு நிர்ணயம் செய்து வழங்க கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு பலமுறையீடுகள் செய்து விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 6326/2015/சி1, நாள் 29.02.2016 மற்றும் 30.05.2016 நாளிட்ட கடிதங்களின் வழியாக உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, திருநெல்வேலி அவர்களுக்கு தெளிவுரை கோரி கடிதம் அனுப்பியிருந்தார்கள். மேலும்,

நகராட்சி ஆணையர், கடையநல்லூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 6326/2015/சி1, நாள் 05.05.2021–ல் கண்டுள்ள கடிதம் வழியாக உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை (நகராட்சி ஓய்வூதியம்) சென்னை அவர்களுக்கு தெளிவுரை கோரி கடிதம் அனுப்பியிருந்தார்கள். மேற்கண்ட ஊதியம் நிர்ணயம் செய்வதற்கு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் எந்தவித தெளிவுரையும் வழங்கப்படவில்லை. தற்போது மேற்படி அரசாணை மற்றும் கடிதங்களின்படி ஊதியம் மறு நிர்ணயம் செய்து எனது ஓய்வூதிய கருத்துரு கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்கள் அனுப்பிய பின்னர் கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களின் கருத்துருவின்படி ஓய்வூதியம் வழங்க மறுப்பது எனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகிறது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1742/2021/எப்3, நாள் 26.04.2022ல் கண்டுள்ள கடிதத்தில் அரசாரணை எண். 762, நிதித் (ஊபி) துறை, நாள் 20.08.1986–ன்படி, ஊதியம் மறு நிர்ணயம் செய்து வழங்கிய உத்தரவிற்கு நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 22320, நாள் 16.05.2022ன் மூலம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ஒப்புதல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, நகராட்சியில் 35 வருடங்களாக எந்தவித பதவி உயர்வும் இல்லாமல் ஒரே பணியில் சேர்ந்து ஒரே பணியில் ஓய்வு பெற்றுள்ள எனக்கு அரசாணையின்படி, ஊதியம் மறு நிர்ணயம் செய்து கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்ட ஓய்வூதிய கருத்துருவின்படி ரூ.76,500/- ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கிய ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்க இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, நந்தனம், சென்னை, அவர்களுக்கும் 01.04.2013 முதல் கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களால் எனக்கு ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கிவிட்டு ஊதிய நிலுவைத் தொகை வழங்காமல் உள்ள கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகை வழங்கவும் தக்க ஆணையிட்டு எனது வாழ்வாதாரத்தை காக்கும்படி இருகரம் கூப்பி பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 19.08.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் கடையநல்லூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) கடையநல்லூர் நகராட்சி ஆணையர் (கூ.பொ) கடிதம் ந.க.எண். 4372/2021/சி1, நாள் 23.09.2025 ல் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"திரு. ஆர். சிரில்ஸ்டிபன், மின்கம்பியாளர், கடையநல்லூர் நகராட்சி என்பவர் விண்ணபத்தின்படி, SSLC கல்வித் தகுதியுடன் ITI தேர்ச்சி பெற்ற தொழில் நுட்ப பணியாளர் நிலை II, குழாய் பொருத்துநர் நிலை I மற்றும் நிலை II, வடிதளம் இயக்குபவர் மற்றும் மீட்டர் ரீடர் ஆகியோருக்கு அரசாணை (நிலை) எண் 762 நிதித்துறை, நாள் 20.08.1986 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 1742/2021/எப்3, நாள் 26.04.2022ன்படி தனியருக்கு 01.11.1989 முதல் 31.07.2022 வரை ஊதிய பணப்பலன்கள் பின்காலத்தில் நடைபெறவுள்ள தணிக்கைக்கு உட்படுத்தி வழங்க உத்திரவிடப்பட்டது.

மேற்கண்ட உத்திரவில் தணிக்கைக்கு உட்படுத்தி நிலுவை ஊதியப் பணப்பலன்கள் வழங்க உத்திரவிடப்பட்ட நிலையில் 2022-23ம் ஆண்டு தணிக்கை அறிக்கை 30.08.2024 அன்று இந்நகராட்சிக்கு கிடைக்கப்பெற்றது.

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந. க. எண். 9828 / 2024 / எப்2, நாள் 27.09.2024–ன்படி, கடையநல்லூர் நகராட்சி அலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். 670/2024/சி1, நாள் 01.10.2024–ன்படி தனியர் 01.10.2024ல் சுயவிருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் சம்பந்தப்பட்ட தணிக்கை அறிக்கையில் தணிக்கை தடை ஏதும் எழுப்பப்படாத நிலையில் ஊதிய நிலுவைப் பணப்பலன்கள் ரூ.4,35,966/ஐ தனியருக்கு வழங்க Bill process 03.10.2024 அன்று தயார் செய்யப்பட்டது.

இருந்தபோதிலும் தனியர் சுயவிருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதால் உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு தனியருக்கு ஓய்வூதிய பிரேரணை அனுப்பிவிட்டு, மேற்கண்ட துறை மூலம் ஓய்வூதியம் எந்தவித திருத்தங்களுமின்றி முழுமையாக பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்ட

பின்னர் தனியருக்கு நிலுவை ஊதியப் பணப்பலன்கள் வழங்கும் வகையில் தனியருக்கு நிலுவை ஊதியப் பணப்பலன்கள் நிறுத்தி வைக்கப்பட்டு கடையநல்லூர் நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண். 670/2024/சி1, நாள் 26.11.2024ல் தனியருக்கு ஓய்வூதியம் அனுமதிக்க வேண்டி ஓய்வூதியப் பிரேரணை உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம், சென்னை அவர்களது நி.மு.எண்.e-547636/நஓச(3)/2024, நாள் 10.02.2025 கொடு ஆணை எண். 33057/M–ன்படி (ஓய்வூதியக்கொடு ஆணை எண் 33057/M) ஓய்வூதியக்கொடு ஆணையில் தனியருக்கு கடைசி ஊதியம் 01.10.2024ன்படி ஓய்வூதியம் அனுமதிக்கப்படாமல், 01.01.2016ல் அனுமதிக்கப்பட்ட ஊதியத்தின்படி ஓய்வூதியம் நிர்ணயிக்கப்பட்டு SSLC கல்வித் தகுதியுடன் ITI தேர்ச்சி பெற்ற தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அரசாணை எண். 762, நிதித்துறை, 20.08.1986ன்படி கடையநல்லூர் நகராட்சி அலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.4372/2022/சி1, நாள் 22.07.2022–ன்படி ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டது நிராகரிக்கப்பட்டுள்ளது. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம், சென்னை அவர்களது கடிதம் நி.மு.எண்.e-547636/நஓச(3)/2024, நாள் 10.02.2025 கொடு ஆணை எண். 33057/M நகலாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்களது பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அதன்படி தனியருக்கு கடையநல்லூர் நகராட்சி அலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.4372/2022/சி1, நாள் 22.07.2022–ல் அரசாணை எண்.762 நிதித்துறை 20.08.1986–ன்படி SSLC கல்வி தகுதியுடன் ITI தேர்ச்சி பெற்ற தொழில்நுட்ப பணியாளர்களுக்கு ஊதிய மறுநிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2013 முதல் 31.07.2022 வரையிலான காலத்திற்கு ஊதிய நிலுவைப் பணப்பலன்கள் வழங்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. " எனத் தெரிவித்துள்ளார்.

4) இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கடையநல்லூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 11.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. R. சிரில்ஸ்டீபன் என்பவர் 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் முறைமன்ற நடுவர் முன் நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

" 1. நான் 01.10.2024 பிற்பகல் முதல் விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு அரசணை எண். 762 நிதித் (ஊபி) துறை, நாள் 20.08.1986ன் படி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான நிலுவைத் தொகை இதுவரை பெற்றுத்தரவில்லை.

2. என்னுடன் பணியில் சேர்ந்தவர்களுக்கு ஊதியம் 01.01.2016க்கு ரூ.56,900/- என நிர்ணயம் செய்துள்ளனர். ஆனால், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நாள் 01.01.2016–ல் எனது ஊதியம் ரூ.53,600/- என நிர்ணயம் செய்துள்ளனர். எனவே, எனது ஊதியத்தினை ரூ.53,600/- இருந்து ரூ.56,900/- என சரியாக கணக்கிட்டு வழங்கவும், அதனடிப்படையில் ஓய்வூதியம் நிர்ணயம் செய்யவும் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. நான் ஓய்வு பெற்று ஓராண்டு காலம் நிறைவு பெற உள்ள நிலையிலும் எனக்கு சேரவேண்டிய சிறப்பு சேமநல நிதி (SPF) முதிர்வுத் தொகை இன்று வரை வழங்கவில்லை. அதனை வழங்கிட ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட எனது கோரிக்கையின் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரான கடையநல்லூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி கணக்கர்/மேலாளர் (பொறுப்பு) ஆகியோர் 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் முறைமன்ற நடுவர் முன் நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"1. மனுதாரரின் ஊதிய நிர்ணயம் அரசாணை எண். 762, நிதித் (ஊபி) துறை, நாள் 20.08.1986–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2. ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டதற்கான நிலுவைத் தொகை 01.04.2011 முதல் 01.10.2024 வரை பெற்றுத்தர உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவு, அத்துறையால் நிராகரிக்கப்பட்டு முன்மொழிவினை திருப்பி அனுப்பி விட்டதால், அவர் கோரியுள்ள நிலுவைத் தொகை பெற்றுத்தர இயலவில்லை.

3. மனுதாரருக்கு ஓய்வூதியமாக ரூ.26,800/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மனுதாரர் அதிகமான காலம் கோவில்பட்டி நகராட்சியில் பணிபுரிந்துள்ளார். அவ்வமயம் கோவில்பட்டி நகராட்சியில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி கடையநல்லூர் நகராட்சிக்கு இன்றுவரை மாற்றம் செய்யப்படாததால் மனுதாரருக்குச் சேரவேண்டிய சிறப்பு சேமநலநிதி முதிர்வுத் தொகை வழங்கப்படவில்லை. மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் விசாரணையின் போதுதான் சிறப்பு சேமநல நிதி வழங்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டது. மனுதாரரால் தெரிவிக்கப்பட்டபின் அன்னாருக்கு சேரவேண்டிய சிறப்பு சேமநலநிதி முதிர்வுத் தொகை வழங்கிட உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேற்கண்ட விவரங்களை மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்." எனத் தெரிவித்துள்ளனர்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, கடையநல்லூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி கணக்கர்/மேலாளர் (பொறுப்பு) ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கப்படுகிறது.

மனுதாரருக்கு அரசாணையின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதற்கான நிலுவைத் தொகை மற்றும் சிறப்பு சேமநல நிதி (SPF) தொகை ஆகியவற்றை வழங்கவும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தன்னுடன் பணியில் சேர்ந்தவர்களுக்கு 01.01.2016ல் ஊதியம் ரூ.56,900/- என கணக்கில் கொண்டு ஓய்வூதியம் நிர்ணயம் செய்துள்ளவாறு, தனக்கும் ஓய்வூதியம் கணக்கிட்டு வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள விவரம் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரருக்கு அரசாணையின்படி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதும், அதற்கான நிலுவைத்தொகை 01.04.2011 முதல் 01.10.2024 வரை பெற்றுத்தர உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவு அனுமதிக்கப்படாததால், நிலுவைத் தொகை பெற்றுத்தர இயலாததும், சிறப்பு சேமநல நிதித் தொகை வழங்கப்படாதது குறித்து தற்போது தெரியவந்துள்ளதால், கோவில்பட்டி நகராட்சியில் மனுதாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதித் தொகையினை கடையநல்லூர் நகராட்சி கணக்கிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு சிறப்பு சேமநல நிதித் தொகையினை விரைந்து மனுதாரருக்கு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையர் மற்றும் நகராட்சி கணக்கர்/மேலாளர் (பொறுப்பு) ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில்;

(i) மனுதாரருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநல நிதித் தொகையினை காலதாமதம் ஏற்படுத்தாமல் விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடையநல்லூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ii) தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்.762 நிதித் (ஊதியக்குழு) துறை, நாள் 20.08.1986–ன் பரிந்துரையின் அடிப்படையில் மாநகராட்சிகள்/நகராட்சிகள்/ மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதிய விகிதத்தை முன்தேதியிட்டு (அரசாணை எண்.762 நிதித் (ஊதியக்குழு) துறை, நாள் 20.08.1986 வெளியிடப்பட்ட நாள் முதல்) திருத்தியமைத்தும், அதனைத் தொடர்ந்து வரும் ஊதிய

திருத்தங்களுக்கு ஏற்ப ஊதிய விகிதங்களை திருத்தியமைக்க கோரிய சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரின் கோரிக்கை நிராகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதும், அரசு கடிதம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை எண். 12277/ME3/2013-2, நாள் 28.01.2024ல் 20.01.2014 நாளிட்ட U.O.No.44436/ பி.சி/2013-இன் வழி நிதித்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்கக நகராட்சி ஒய்வூதிய சரிபார்ப்புப் பிரிவு கடித எண். நி. மு. எண். e-547636/நஒச(3)/2024, நாள் 10.02.2025, கொடு ஆணை எண். 33057/M-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண். 338, நிதித் துறை, நாள் 26.08.2010-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி ஆய்வு செய்து தங்கள் அளவிலேயே நகராட்சி நிர்வாக ஆணையாளர் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையரால் அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துரு நிதித் துறையால் நிராகரிப்பு செய்யப்பட்டுள்ளதால் தற்போது தனியரின் ஊதியம் திருத்தியமைப்பதற்கு நிதித் துறையின் ஒப்புதல் பெறப்பட்டு இருப்பின், அதன் நகலினை அனுப்பிடவும், குறை களைந்து கருத்துரு மற்றும் பணிப்பதிவேடு அனுப்பப்படும் நேர்வில் முழு ஒய்வூதியம் மற்றும் இறப்பு மற்றும் ஒய்வுக்கால பணிக்கொடை அனுமதிக்கப் பரிசீலிக்கப்படும் என உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்ககத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடையநல்லூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 12-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. சிரில்ஸ்டீபன்,
10/21, புலிக்குட்டி விநாயகர் கோவில் தெரு,
கீழப்புலியூர் 627814, தென்காசி மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
கடையநல்லூர், தென்காசி மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032

13/11/25
செயலாளர்.